திரு. கே. வினாயகம். : சார், இப்படி ஏமாற்றியதன் விளைவாக நமக்கு ஏற்படுகிற நஷ்டங்கள் பல இடங்களில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுப்பதற்கு ஏதாவதொரு "இன்ஸ்பெக்டிங் ஸ்க்வாடு" மாதிரி வைப்பதற்கு அரசு முன் வருமா ? ஆளுங்கட்சியோடு சேர்ந்தவரல்ல என்று சொல்லிவிட்டால் போதும். அது அர்த்த மற்ற கேள்வி என்பதில் என்ன பொருள் இருக்கிறது என்று விளக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பங்கு தாரர்கள் யார் யார் என்று பெயர்கள் தெரியவில்லை என்று நான் பதில் சொன்னேன். "ஆளுங்கட்சிக்காரரா ?" என்றால், "காங்கிரஸ்கட்சிக்காரர்" என்று நான் சொல்லி விடுவது ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. குற்றச்சாட்டாகக் கூறக் கூடாது. பங்கு தாரர்கள் பெயர் பற்றி எங்களுக்குத் தகவல் இல்லை. ஸினிமாடோ—கிராப் சட்டத்தின்படி கேளிக்கை வரி செலுத்துவதற்கான அனுமதி கோரும் மனுவில் உரிமையாளர் பெயர் மட்டும் தான் இருக்கும். அதில் பங்குதாரர்கள் யார் யார் என்று குறிப்பிட்டிருக்காது. ஒருவேளை கனம் உறுப்பினரிடம் தகவல் இருந்தால் கொடுக்கலாம். அதை விட்டு விட்டு, "ஆளுங்கட்சிக்காரரா ?" என்று கேட்பதென்றால் "இல்லை ; காங்கிரஸ்காரர்" என்று நான் பதில் சொல்லிவிட எவ்வளவு நேரம் ஆகும் ? அதனால்தான், அவ்வாறு குறிப் பிட்டேன்.

மேலும், இதுபோன்ற வரி ஏய்ப்புக்களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று டி.சி.டி.ஓ.க்களுக்கெல்லாம் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. கனம் உறுப்பினர் குறிப்பிடுவது போன்ற ஸ்க்வாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

State quota of I.A S Cadre

* 710 *Q*—THIRU G.GOMATHYSANKRA DIKSHIDAR Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) Whether th State quota of I.A.S. Cadreis being given mainly to officers working in the Revenue Department;

(*b*) the reasons therefor ; and

(*c*) the steps taken by the Government to uphold the claims of officers working in other departments.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள 1954-ம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (பணிக்கமர்த்தும்) விதிகளின் 9-வது விதி, ஒவ்வொரு மாநிலத்தின் இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதிதரத்தின் பதவி உயர்வுப் பங்கீட்டளவில் 85 சதவீதம், ஸ்டேட் சிவில் சர்வீஸ் அதிகாரிகளைக் கொண்டு, அதாவது வருவாய்த்துறை யில் பணியாற்றும் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட வேண்டு மென்றும், எஞ்சிய 15 சதவீதப் பதவி உயர்வுப் பங்கீட்டளவு, ஸ்டேட் ஸிவில் சர்வீசில் அல்லாத பிற பணிகளில் உள்ள அதிகாரி களுக்கு அதாவது, பிற துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்காக, ஒதுக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிடுகிறது.

(உ) ஸ்டேட் ஸிவில் சர்வீஸில் அல்லாத பிற பணிகளில் உள்ள அதிகாரிகளுக்கான பதவி உயர்வுப் பங்கீட்டுச் சதவீதத்தை அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசு நிச்சயித்துள்ள காரணத் தால், இந்த அதிகாரிகளின் நலனும் அந்த அடிப்படையில் பாதுகாக்கப்படுகிறது.

1970 ஏப்ரல் 8]

THIRU T. MARTIN : Mr. Speaker, in 1969 the Union Public Service Commission which came here to settle the I.A.S. quota for this State has not settled it. May I know from the Hon. the Chief Minister the reason for the same ? Further, with regard to certain Gazetted Officers, may I know whether some officers holding tenure posts were confirmed in those tenure posts, Sir ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1969 நவம்பர் மாதத்தில் வருவதாக தேர்வுக்குழு அறிவித்திருந்தது. அந்த நேரத்தில், நேரடியாக நியமனம் பெற்ற டெபுடி கலெக்டர்கள், தங்கள் ஸீனியாரிடி சரிவர அமைக்கப்படுவதற்கு முன்னால் தேர்வுக்குழு வந்தால், தங்களுக்கு அநீதி ஏற்படும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையினுடைய நியாயத்தை அறிந்த அரசு, தேர்வுக் குழு வருவதை ஒத்திப்போடுமாறு கேட்டுக் கொண்டது.

திரு. கே. விநாயகம் : மற்ற இலாக்காக்களில் இருப்பவர்களுக்கு, இந்த ஐ.ஏ.எஸ். பெற என்ன வழி இருக்கிறது ? ரெவினியூ டிபார்ட்மெண்டில் இருப்பவர்களுக்குத்தான் முதன் முதல் வாய்ப்புத் தரப் படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன முயற்சி செய்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தடுப்பதற்கு அல்ல. ஏற்கனவே முழுவதுமே ரெவினியூ டிபார்ட்மெண்டில் உள்ளவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்தது. 1956-ஆம் ஆண்டில்தான் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு 85 சதவீதம் என்றும், மற்ற டிபார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு 15 சதவீதம் என்றும் ஆக்கியிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 711, 712, 713, 714, 715, 716, 717 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Special Employment Exchange for Physically handicapped.

* 718 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Special Employment Exchange for the physically handicapped has receievd applications for the post of District and Sessions Judges ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாவட்ட செஷன்சு நீதிபதிப் பதவிக்கான ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகத்திடம் வந்தது. அது அரசுக்கு அனுப்பப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரியான, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் கீழ் நிலையில் இருக்கக் கூடிய பதவிகளுக்குத் தான் அது மாதிரி வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று சொல்லப் படுகிறது. அப்படியிருக்கிற உயர் பதவிக்கு அவர்கள் மனுப் போடும்போது, அவர்கள் மனுக்களை கவனிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாவட்ட நீதிபதி வேலையை மிக உயர்ந்த பதவி என்று அரசாங்கம் கருதுகிறது.